# தூய ஆவியாரின் பெருவிழா

வாசகங்கள்

திருத்தூதர் பணிகள் 2:1-22; 1 கொரிந்தியர் 12:3-7, 12-13; யோவான் 20:19-23

## முன்னுரை

ஒரு குளிர்ச்சியான மாலை நேரத்தில், ஒரு குடும்பத்தினர் தங்கள் வீட்டின் அடுப்பில் இருந்த நெருப்பு கிட்டத்தட்ட அணைந்து விட்டதை கவனித்தார்கள். சாம்பலின் கீழ் சில சிவப்பு எரிவெப்பங்கள் மட்டும் இருந்தன. அறை மெதுவாக குளிர ஆரம்பித்தது.

குடும்பத் தலைவரான அப்பா மெதுவாக அந்த நெருப்புக் கரிகளை கிளறி, சிறிது ஊதினார். முதலில் எந்த மாற்றமும் தெரியவில்லை. பின்னர் ஒரு சிறிய தீப்பொறி ஒளிந்தது. உடனே அவர் ஒரு சிறிய மரத்துண்டை வைத்து மீண்டும் ஊதினார். சில நொடிகளில், அனைந்து போக இருந்த நெருப்பு மீண்டும் பிரகாசமாக எரிந்து, முழு அறையையும் வெப்பம் சூழ்ந்தது.

அந்த நெருப்பு அதன்பிறகு அணைந்து போகவில்லை…அதை சற்றே உயிரூட்ட ஒரு ஆழமான உயிர் மூச்சு மட்டும் தேவைப்பட்டிருந்தது.

இதேபோல், நமது விசுவாச வாழ்க்கையிலும் சில நேரங்களில் இவ்வாறே நடக்கிறது. சில சமயம் வாழ்க்கை குளிர்ச்சியாக உணரப்படுகிறது. சில சமயம் நமது இதயம் சோர்ந்து போகிறது. சில சமயங்களில் பயமும் கவலையும் நம்மை சூழ்கின்றன. நமது நம்பிக்கைகள் குறைந்து விடுகின்றன.

சில நேரங்களில் நாம் பயம், நடைமுறை பழக்கம், கவலை ஆகியவற்றின் காரணமாக “ மூடிய கதவுகளுக்கு” பின்னால் மறைந்து கொண்டு, எதுவும் மாறப் போவதில்லை என்று எண்ணுகிறோம்.

முதல் பாஸ்காவின் மாலை பொழுதில் சீடர்களும் இதே நிலைமையில்தான் இருந்தார்கள். அவர்கள் பயந்திலும் குழப்பத்திலும் இருந்தார்கள். கதவுகளை பூட்டிக்கொண்டு மறைந்திருந்தார்கள். அவர்களுடைய தைரியமும் மகிழ்ச்சியும் பெருமளவில் குறைந்து போயிருந்தது.

அப்போது இயேசு அவர்களிடையே வந்து தோன்றினார்

“உங்களுக்கு சமாதானம் உண்டாகுக” என்று கூறி, அவர்கள்மேல் ஆழமான பரிசுத்த ஆவியின் மூச்சை ஊதி“பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.

அந்த ஒரு ஆழமான பரிசுத்த ஆவியின் உயிர் மூச்சே அவர்களை முழுமையாக மாற்றியது.பயம் → தைரியமாக மாறியதுசந்தேகம் → மகிழ்ச்சியாக மாறியதுமௌனம் → துணிச்சலான சாட்சியாக மாறியது

அவர்களுடைய விசுவாசத்தின் மேல் ஊதப்பட்ட சிறிய தீப்பொறிகள், ஒரு பெரிய தீப்பரவலாக தீப்பிழம்பாக மாறியது

இன்று நாம் கொண்டாடுவது அதே பரிசுத்த ஆவியை அவரின் உயிர் மூச்சை பெறக்கூடிய அருள்வாழ்வுதான் பெந்தெகொஸ்தே திருநாள் மூலம் பரிசுத்த ஆவியின் ஆழமான

மூச்சும் பெருந்தீயும், இன்றும் நமது வாழ்க்கையில் செயல்பட்டு நம்மை வழிநடத்தி கொண்டிருக்கிறது.

நாம் அனைவரும் அவருடைய பெயரால் இங்கு ஒன்றாக கூடிவந்துள்ளோம் அவர் நம்மிடையே உயிருடன் இருக்கிறார்.அவர் நமது இதயங்களை உயிரூட்டத் தயாராக இருக்கிறார்.நமது தைரியத்தை மீண்டும் உயிர்ப்பிக்கவும்,அன்பு, இரக்கம், நம்பிக்கை ஆகியவற்றின் சாட்சிகளாக நம்மை அனுப்பவும் தயாராக இருக்கிறார்.

ஆகையால்,நமது இதயங்களை திறந்து வைத்து,பரிசுத்த ஆவியின் அருள்வரங்களை பெற இணைந்து மன்றாடுவோம்.

## திருப்பலிக்கான மறையுறை

ஒரு குளிர்ச்சியான மாலை நேரத்தில், ஒரு குடும்பம் வெப்பம் தரக்கூடிய அடுப்பைச் சுற்றி அமர்ந்திருந்தது. அந்த நெருப்பு கிட்டத்தட்ட அணைந்து போயிருந்தது. சாம்பலின் கீழ் சில சிவப்பு எரிவெப்பங்கள் மட்டும் இருந்தன. அறை மெதுவாக குளிர ஆரம்பித்தது.

குடும்பத் தலைவரான அப்பா ஒரு கம்பியை எடுத்து, மெதுவாக அந்த நெருப்பைக் கிளறி, சிறிது ஊதினார். சில நொடிகள் எந்த மாற்றமும் தெரியவில்லை. பின்னர் ஒரு சிறிய தீப்பொறி தோன்றியது. கடும்பத் தலைவரான அப்பா ஒரு சிறிய மரத்துண்டை வைத்து மீண்டும் ஊதினார். சில நிமிடங்களில் அந்த நெருப்பு மீண்டும் பிரகாசமாக எரிந்து, முழு அறையையும் வெப்பமூட்டியது.

அவர் தனது குழந்தைகளிடம் கூறினார்:"பாருங்கள், நெருப்பு இருந்தது. ஆனால் அதற்கு உயிர் மூச்சு என்ற காற்றை மட்டும் தேவைப்பட்டிருந்தது."

அந்த உயிர் மூச்சே பெந்தெகொஸ்தே.

பெந்தெகொஸ்தேக்கு முன் சீடர்கள் அந்த மங்கிய நெருப்பைப் போல இருந்தார்கள். இயேசு இறந்தார். சீடர்களின் நம்பிக்கைகள் உடைந்து போயின. அவர் உயிர்த்தெழுந்தார் என்று கேட்ட பிறகும், அவர்கள் பூட்டப்பட்ட கதவுகளுக்குப் பின்னால் மறைந்து இருந்தார்கள். பயம் அவர்களின் விசுவாசத்தை சாம்பல் போல மூடியிருந்தது.

அவர்கள் விசுவாசிகள் தான் — ஆனால் தைரியமில்லாதவர்கள்.

அவர்கள் சீடர்கள் தான் — ஆனால் இன்னும் இயேசுவின் உயிர்ப்பினை  அறிவிபக்க துணிவில்லாமல் இருந்தார்கள்

பிறகு வந்தது அந்த ஆழமான உயிர் மூச்சு.

யோவான் எழுதிய திருமுகத்தில் உயிர்த்தெழுந்த இயேசு அவர்களிடையே தோன்றி"உங்களுக்கு சமாதானம் உண்டாகுக "  என்று சொல்கிறார் என்று எழுதப்பட்டுள்ளது

இயேசு அவர்கள் ஓடியதற்காக கண்டிக்கவில்லை.மாறாக அவர் தமது காயங்களை சீடர்களுக்கு காட்டுகிறார்.

பிறகு மிகவும் எளியதும் ஆற்றல்மிக்கதுமான ஒன்றைச் செய்கிறார்

அவர் செய்தது அவர்கள்மேல் பரிசுத்த ஆவியின் மூச்சைவிட்டு

“பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்.

இந்த உயிர் மூச்சே நம்மை திருவிவிலியத்தின் ஆரம்பத்துக்கு அழைத்துச் செல்கிறது.தொடக்கநூலில் கடவுள் மண்ணில் இருந்து மனிதனை உருவாக்கி, அவனில் உயிர்மூச்சை ஊதினார்.

இப்போது இயேசு மீண்டும் உயிர் மூச்சை ஊதுகிறார்

இது ஒரு புதிய படைப்பு.பயம் கொண்டு கதவுகளுக்குப் பின்னால் இருந்தவர்கள் மீண்டும் உயிர்பெறுகிறார்கள்.

பெந்தெகொஸ்தே என்பது திருச்சபையின் முதல் ஆழ்ந்த மூச்சு.

ஆனால் அப்போஸ்தலர் பணிகள் நூலிழ் லூக்கா இதை வேறு விதமாக விளக்குகிறார்.அவர் வலிமையான காற்றும் தீயின் நாவுகளையும் பற்றி பேசுகிறார்.காற்றும் தீயும் – சக்தியை இயக்கும் உயிர் மூச்சின் அடையாளங்கள்.

ஒரு சிறுவன் காற்று அடிக்காத நாளில் பட்டம் பறக்கவிட்டான். அவன் ஓடினான், ஓடினான்; ஆனால் பட்டம் காற்றில்லாத தரையை நோக்கி இழுத்துக்கொண்டே இருந்தது. அருகில் இருந்த ஒரு முதியவர் சிரித்து கொண்டே கூறினார் “காற்று சற்று மேலே அடிக்கிறது

நீ பட்டத்தை கொஞ்சம் மேலே உள்ள காற்றின் உயரத்திற்கு உயர்த்தினால பட்டம் நன்றாக பறக்கும் என்றார்.

பரிசுத்த ஆவி அதுபோலத்தான்.கடவுளின் காற்று வீசிக்கொண்டே இருக்கிறது –ஆனால் அதை பிடிக்க நாம் நமது இதயத்தை உயர்த்த வேண்டும்.

முதல் பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் நகருக்கு பல நாடுகளிலிருந்து வந்த மக்களால் நிரம்பியிருந்தது. பல மொழிகள், பல கலாச்சாரங்கள்.

அப்போது இயேசுவின் சீடர்களான இந்த எளிய மீனவர்கள்தான் கடவுளின் மகத்தான செயல்களை அறிவிக்க ஆரம்பித்தார்கள்.பல தேசங்களில் இருந்து வந்திருந்த ஒவ்வொருவரும் தங்கள் சொந்த மொழியில் அந்த செய்தியை கேட்டார்கள்.

இது பாபேல் கோபுரத்தில் நடந்ததைப் போல இல்லை.அங்கு மனிதர்கள் பெருமையால் ஒன்றுபட முயன்றார்கள்.அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது.

ஆனால் பெந்தெகொஸ்தேவில்,பெருமை அல்ல – தாழ்மையும் அன்பும் ஒரு சேர ஒருமைபாட்டை உருவாக்கின.பரிசுத்த ஆவி வேறுபாடுகளை அழிக்கவில்லை;மாறாக அவர் புரிதலை உருவாக்கினார்.

அப்போது வேறுபாடு இருந்தது – ஆனால் இப்போது ஒன்றிணைவு இருந்தது.

இன்றைய உலகம் இதையே தேடி ஏங்குகிறது அல்லவா?நாம் அதிகம் பேசுகிறோம் – ஆனால் குறைவாக புரிந்துகொள்கிறோம்.குடும்பங்களில் கூட புரிதல் குறைகிறது.நாடுகள் அமைதியைப் பேசினாலும், போரைத் தேர்வு செய்கின்றன.திருச்சபையிலும் சில நேரங்களில் கேட்பதைவிட வாதங்கள் அதிகம்.

பரிசுத்த ஆவி பாலங்களை அமைக்கிறார்.

ஒரு ஆலயத்தில் பழைய ஆர்கன் இசைக்கருவி இருந்தது. அது சரியாக ஒலிக்கவில்லை. சில குழாய்கள் அதிகமாக சத்தம் செய்தன; சில ஒலியே எழுப்பவில்லை.

ஒருவர் சொன்னார்: "இது பயனற்றது."ஆனால் ஒரு நிபுணர் சொன்னார்:"இது பயனற்றது அல்ல. இது சரியாக ஒத்திசைக்கப்பட வேண்டும்."

புனித பவுல் சொல்வது போல,வரங்கள் பல இருக்கின்றன — ஆனால் ஆவியானவர் ஒருவர் மட்டுமேபரிசுத்த ஆவி எல்லோரையும் ஒரே மாதிரி ஆக்கமாட்டார்.அவர் ஒற்றுமையை உருவாக்குகிறார்.

உங்களுக்கான வரம் —அன்பு காட்டுவது, கற்பிப்பது, கேட்பது, உதவுவது, ஊக்கப்படுத்துவது —இவை அனைத்தும் அனைவருக்கும் நன்மை தருவதற்காக மட்டுமே ஆனால் ஒற்றுமைக்கு முன்பாக தைரியம் தேவை.

இயேசுவின் மரணத்திற்குப் பிறகு சீடர்கள் பயந்தார்கள்.பயம் கதவுகளை மூடச்செய்கிறது

நாமும் அப்படியே செய்கிறோம் —உள்ளத்தை பாதுகாக்கிறோம்,கடினமான உரையாடல்களைத் தவிர்க்கிறோம்.

பயம் நம்மை பாதுகாக்கலாம் —ஆனால் அது நம்மை சிறியவர்களாக வைத்துவிடும்.

பெந்தெகொஸ்தே விழா மூடிய கதவுகளை திறந்த இதயங்களாக மாற்றுகிறது.

ஒரு வீட்டில் மின்சாரம் போனால் எல்லாம் நின்றுவிடும்.அந்த வீட்டில் உள்ள பொருட்கள் எதுவும் வேலை செய்யாது.

ஒரு சிறுவன் கேட்டான்: "ஏன் எல்லாம் வேலை செய்யவில்லை?"அப்பா சொன்னார்: "அனைத்தும் மின்சாரத்தையே சார்ந்தது."

அதேபோல் திருச்சபையும்பரிசுத்த ஆவியின் சக்தியை சார்ந்தது.

ஆவி இல்லாமல் திருச்சபை ஒரு அமைப்பாக மட்டுமே இருக்கும்.பரிசுத்த ஆவியினால் அது உயிருடன் இருக்கும்.

அப்போஸ்தலர்களே

அதற்கு சாட்சி:முன்பு — ஓடி மறைந்தவர்கள்பிறகு — வெளியில் வந்து நற்செய்தியை அறிவித்தார்கள்

முன்பு — குழப்பம் ஏற்பட்டது பிறகு — தெளிவும் தைரியமும் பிறந்தது

ஏன் எல்லாம் மாறியது?

சீடர்கள் இயேசுவை சந்தித்தார்கள். மன்னிப்பை அனுபவித்தார்கள். இறைபணியை பெற்றார்கள்.பரிசுத்த ஆவியை பெற்றார்கள்.

அந்த பரிசுத்த ஆவி முதலில் கொடுத்த வரம்:சமாதானமும் மன்னிப்பும்.

ஒரு மனிதர் கூறினார்:அவரின் வாழ்க்கையின் இருண்ட காலத்தில், தினமும் காலை“பரிசுத்த ஆவியே வாரும்” என்று மட்டும் ஜெபித்தார்.

அவர் சொன்னார்:பெரிய அதிசயம் எதுவும் இல்லை.ஆனால் மெதுவாக –சிறிது பொறுமை,சிறிது தைரியம்,சிறிது நம்பிக்கை எனக்குள் அதிகரித்தது.

பரிசுத்த ஆவி சில நேரங்களில் புயலாக வரலாம்;ஆனால் பல நேரங்களில் மெதுவான உயிர் மூச்சாக வருகிறார்.

அவர் நம்முல் செயல்படுகிறார்

ஒரு தாய் தினமும் அன்புடன் குடும்பத்தை பராமரிப்பதிலும் ஒருவர் மன்னிப்பைத் தேர்வு செய்வதிலும் ஒரு இளைஞன் வேதாகமத்தை உயிருள்ள வார்த்தையாக கண்டுபிடிப்பதிலும் நேரத்தை செலவு செய்கிறார்.

பரிசுத்த ஆவியின் வரங்கள் இல்லாமல் வேதாகமம் குளிர்ந்த உணவைப் போல இருக்கும்.பரிசுத்த ஆவியால் அது உயிரூட்டும் உணவாக மாறும்.

பெந்தெகொஸ்தே என்பது கடந்த காலத்தின் நிகழ்வு மட்டும் அல்ல.இன்றும் அது நடக்கிறது.

நாம் நம்மிடம் அடிக்கடி கேட்க வேண்டும்:என் வாழ்க்கையில் மூடிய கதவுகள் எவை?எங்கே பயம் என் அன்பை குறைத்துள்ளது?எங்கே என் விசுவாசம் சாம்பலில் மறைந்திருக்கிறது?

காற்று இன்னும் வீசுகிறது.மூச்சு இன்னும் கொடுக்கப்படுகிறது.இயேசு இன்றும் சொல்கிறார்:“பரிசுத்த ஆவியின் வரங்களை பெறுங்கள்.”

ஒரு மருத்துவமனையில், ஒரு குழந்தை முதல் மூச்சை எடுக்கும் தருணம் மிக அழகானது.அந்த உயிர் மூச்சிலே அந்த குழந்தையின் வாழ்க்கை ஆரம்பிக்கிறது.

பெந்தெகொஸ்தே பிறந்த நாள் திருச்சபையின் முதல் உயிர்மூச்சு.

இன்று அது நமக்கான புதிய மூச்சாக இருக்கலாம்.

உங்கள் விசுவாசம் சாம்பலில் மறைந்த நெருப்பைப் போல இருக்கலாம்.உங்கள் மனம் சோர்ந்து இருக்கலாம்.பயம் உங்கள் இதயத்தை மூடியிருக்கலாம்.

நெருப்பு இன்னும் உள்ளது.அதற்கு பரிசுத்த ஆவியின் உயிர் மூச்சு மட்டும் தேவை.

ஆகையால் நம்பிக்கையுடன் ஜெபிப்போம்

பரிசுத்த ஆவியே வாரும்எங்கள் காயங்களை குணப்படுத்தும்எங்கள் பலவீனங்களை செம்மை படுத்தும் எங்கள் உணர்ச்சிகளை மாற்ற அருள் பொழியும்எங்கள் இதயங்களை பரிசுத்த ஆவியின் வரங்களால் மீண்டும் தீயாய் பற்றி எரியச் செய்யும்

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai